A

# அரையாண்டுப் பொதுத் தேர்வு – 2025

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | |

நேரம்: 3.00 மணி

## பொதுத்தமிழ்

மதிப்பெண்கள்:90

பகுதி – I

குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக.

I பலவுள் தெரிக

14X1=14

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. உலகநாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் – இத்தொடர் உணர்த்துவது.
   அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
   ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது
   இ) காலநிலை மாறுபடுகிறது
   ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது
3. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
   அஃறிணை என்மனார் அவரல பிறவே" – இந்நூற்பா இடம் பெற்ற இலக்கண நூல் ________
   அ) நன்னூல் ஆ) அகத்தியம் இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம்
4. "ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்" ________ பாவிகம்
   அ) கம்பராமாயணத்தின் ஆ) தண்டியலங்காரத்தின்
   இ) சிலப்பதிகாரத்தின் ஈ) சீவகசிந்தாமணியின்
5. சுரதா நடத்திய இதழ்
   அ) இலக்கியம் ஆ) காவியம் இ) ஊர்வலம் ஈ) விண்மீன்
6. **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க**
   அ) உரிமைத்தாகம் – 1. பாரசீகக் கவிஞர்
   ஆ) அஞ்ஞாடி – 2. பூமணி
   இ) ஜலாலுத்தீன் ரூமி – 3. பக்தவச்சல பாரதி
   ஈ) தமிழர் குடும்ப முறை – 4. சாகித்திய அகாதெமி
   அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2 இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1
7. "உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்களுள்
   பாம்போடு உடன்உறைந் தற்று." இக்குறளில் பயின்று வரும் அணி
   அ) தீவக அணி ஆ) உவமையணி
   இ) உருவக அணி ஈ) சொல்பின்வருநிலையணி
8. 'வெங்குருதி' – இலக்கணக் குறிப்பு தருக.
   அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உரிச்சொற்றொடர் ஈ) உருவகம்
9. 'முதல்கல்' கதையில் வரும் கிராமத்தின் மொத்த நிலப்பரப்பு
   அ) நாற்பதுவேலி ஆ) சக்கரைக்குழி
   இ) அறுபதுவேலி ஈ) இவற்றில் ஏதுமில்லை

10. முச்சந்தி இலக்கியம் என்பது
கூற்று 1 : கதை வடிவிலான வடிவம் உடையது
கூற்று 2 : பெரிய எழுத்துப் புத்தகம் என்று அழைக்கப்படுவது
அ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு ஆ) கூற்று 1, 2 சரி
இ) கூற்று 1, 2 தவறு ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

11. சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத்தலைவனின் இன்றைய நிலப்பகுதி
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம் இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

12. படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ) காட்சி ஈ) ஒலி

13. கடையெழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்
அ) ஆய் ஆண்டிரனும் அதிகனும் ஆ) நல்லியக் கோடனும் குமணனும்
இ) நள்ளியும் ஓரியும் ஈ) பாரியும் காரியும்

14. உயிரெழுத்துகள் __________ வகைப்படும்.
அ) மூன்று ஆ) ஆறு இ) எட்டு ஈ) இரண்டு

## பகுதி – II

### பிரிவு – 1

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** 3x2=6

15. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக?
16. "என் முகத்தை நான் தேடியாக வேண்டும் இப்பொழுதேனும்" இவ்வடிகள் இடம் பெற்ற நூல் எது? அதன் ஆசிரியர் யார்?
17. மறக்க கூடாதது, மறக்கக் கூடியது எவற்றை?
18. ஒருமுக எழினி, பொருமுக எழினி – குறிப்பு வரைக?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** 2x2=4

19. புக்கில், தன்மனை – சிறு குறிப்பு வரைக?
20. அக்காலத்துக் கல்வி முறையில் மனனப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
21. மயிலை சீனி வேங்கடசாமியின் ஆய்வுக் கட்டுரைகள் எந்தெந்த இதழ்களில் வெளிவந்தன?

### பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.** 7x2=14

22. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.
அ) தாமரை இலை நீர் போல ஆ) உள்ளங்கை நெல்லிக்கனி போல

23. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக
எத்தனை முறை நீ மற்றவர்கள் முன்னேறி
செல்வதனை கண்டு ஒன்றும் செய்வதறியாது
நம்பிக்கையின்றி துன்புறுவாய். நிறைய தன்னம்பிக்கை கொள்.

24. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.
அ) இப்ப எனக்கு புரிஞ்சு போச்சு நீயும் புரிஞ்சிக்கோ.
ஆ) வூட்டாண்ட வெளையாண்ட கொயந்தையை அப்பா எங்க இஸ்துகினு போனாரு.

25. பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க
களம், கலம்

26. தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக:
அ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் யானைக்குட்டியும் கண்டேன்
ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

27. ஏதேனும் ஒன்றனுக்கு உறுப்பிலக்கணம் தருக.
அ) வந்து (அல்லது) ஆ) தொழுதனர்

28. ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.
அ) பூம்பாவாய் (அல்லது) ஆ) எத்திசை
29. கலைச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் தருக.
அ) Internet banking ஆ) Stapler

30. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக?

பகுதி – III

ஆறு வரிகளுக்கு மிகாமல் விடை தருக.

பிரிவு – 1

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2X4=8

31. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக?
32. 'நீர் நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து
உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' – இக்கவிதையின் அடி தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக?
33. அதிசய மலரின் பூச்செடி எவ்வாறு முளைத்ததாக, தமிழ்நதி கூறுகிறார்?
34. சூதும் கள்ளும் கேடு தரும் – திருக்குறள் வழி விவரிக்க.

பிரிவு – 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. 2X4=8

35. வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு என்பதை இறையன்புவின் கூற்றுவழி நிறுவுக?
36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
37. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
38. படத்தின் வெற்றியில் திரைக்கதையின் பங்கினை விவரிக்க?

பிரிவு – 3

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3X4=12

39. நிரல்நிரை அணி

*(அல்லது)*

சொற்பொருள் பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக.

40. இலக்கிய நயம் பாராட்டுக
(மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக)

பூமிச்சருகாம் பாலையை
முத்துபூத்த கடல்களாக்குவேன்
புயலைக் கூறுபடுத்தியே – கோடிப்
புதிய தென்றலாக்குவேன்
இரவில் விண்மீன் காசினை – செலுத்தி
இரவலரோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை – ஏழை
விறகெரிக்க வீசுவேன்

– நா. காமராசன்

41. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக:
அ) யானைக்கும் அடி சறுக்கும்

*(அல்லது)*

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

42. பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

*(அல்லது)*

வெண்பாவிற்கான இலக்கணம் யாது?

43. தமிழாக்கம் தருக:

Popular as the 'Cultural' of India, Tamil Nadu is extremely well - known for its marvellous temples and other architectural gems. The State rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore paintings that flourished at the time of Chola dynasty in ancient Tanjavoor.

## பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **3x6=18**

44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக?

*(அல்லது)*

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு நிறுவுக.

45. அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது – எவ்வாறு? விளக்குக.

*(அல்லது)*

ஆ) மயிலையார் ஓர் "ஆராய்ச்சிப் பேறறிஞர்" என்னும் கூற்றினைச் சான்றுகளுடன் கட்டுரைக்க.

46. அ) மகாநடிகரைக் கண்ட பாலசந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக?

*(அல்லது)*

ஆ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க?

## பகுதி – V

47. **அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக.** **4+2=6**

அ) **'துன்புளது'** ..... என்று தொடங்கும் கம்பராமாயணச் செய்யுள் பாடலை எழுதுக.
ஆ) **'தலை'** ..... என முடியும் குறள்

***/***